**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 4/2023** | | |
| **PW/DW/CW** | : | **PW8** | | |
| **Name** | : கண்ணாத்தாள் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : ராமன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.03.**2026**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.06.2022ம் தேதி 15.00 மணிக்கு உசிலம்பட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய பெண் தலைமை காவலர் 1922 திருமதி. ரேகா பொறுப்பில் இருந்த போது புகார்தாரர் நதியா ஏற்கனவே நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாருக்கு கொடுத்த மனு எண் 243/2022யை பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 11/2022 பிரிவுகள் 498(A), 406,294(b), 506(i) இதசவாக வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்ததை எடுத்துக்கொண்டு சாட்சிகள் நதியா பாலமுருகன், ராதாமணி, புருஷோத்தம்ம ரெட்டி, மணிகண்டன், அழகர்சாமி, அழகுராஜா, சுதா, வான்மதி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். பின்னர் 11.08.2022ம் தேதி முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்த பெண் தலைமை காவலர் ரேகா அவர்களை விசாரணை செய்து அவரது வாக்குமூலத்தை பதிவு செய்தேன். இவ்வழகக்கின் எதிரிகள் மதுரை உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் எதிரிகள் சரணடைந்து பிணையில் சென்றுள்ளனர்.

இறுதியாக விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

புகார் எழுத்து மூலமாக கொடுக்கப்பட்டதா என்றால் தட்டச்சு செய்து தரப்பட்டுள்ளது. புகாரின்படி 15.06.2022ம் தேதி அ.சா.1ன்னை அடித்து வரதட்சணை கேட்டு விரட்டியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 23.06.2022ம் தேதி 7 நாட்கள் காலதாமதமாக முதல்தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதலில் மனு ரசீது கொடுக்கப்பட்டுவிட்டது. மனு ரசீது 243/2022யையும் இணைத்து குற்ற இறுதியறிக்கையுடன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் மனு ரசீது பற்றி குறிப்பிட்டுள்ளதால் அனுப்பவில்லை. அ.சா.1 தெலுங்கான மாநிலத்தை சேர்ந்தவர் என்றால் சொந்த ஊர் தேனி, அ.சா.1ன் பெற்றோர்கள் தெலுங்கானாவில் தொழில் செய்து வருகிறார்கள். அ.சா.2 முதல் அ.சா.4 வரை உள்ளவர்கள் தெலுங்கானா மாநிலத்தில் வாழ்வதாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அத்தனை சாட்சிகள் வாக்குமூலமும் வழக்கு பதிவு செய்த 23.06.2022ம் தேதியே பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கை பதிவு செய்த தலைமை காவலர் அவர்களின் வாக்குமூலத்தை 11.08.2022ம் தேதியன்று பதிவு செய்தேன் என்றால் சரிதான். அன்றைய தினமே குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் நகை சம்பந்தமான புகைப்படங்களோ அல்லது வரதட்சணை கொடுத்தது சம்பந்தமான புகைப்படங்களோ ஆவணங்களோ ரூபாய் 15 லட்சம் எதிரிகளுக்கு கொடுத்ததற்கு சொல்வதற்கான ரசீதோ ஆவணமோ தாக்கல் செய்யவில்லை என்றசரிதான். சாட்சிகள்

அனைத்தும் விசாரணை செய்து முடித்துவிட்டு காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரணை செய்ததற்கான காரணத்தை எனது இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. குடும்ப பகை காரணமாக காலம் தாழ்த்தி வழக்கறிஞரை வைத்து பொய்யாக சங்கதிகளை புகாரில் தட்டச்சு செய்து கொடுத்த புகாரை அப்படியே வழக்காக பதிவு செய்து அவசர கோணத்தில் ஒரே நாளில் சாட்சிகளின் வாக்குமூலங்களை காவல் நிலையத்திலே வைத்து நானாக தயாரித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. 15.06.2022ம் தேதி புகார்தாரரை அடித்து விரட்டியதாக சொல்லப்படும் சம்பவ இடத்தை நான் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தோ அல்லது அருகில் வசிப்பவர்களை சாட்சியாக இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1ற்கு தமிழே தெரியாது என்றும் வழக்கறிஞரால் தயாரித்து கொடுக்கப்பட்ட புகாரில் அ.சா.1 கையெழுத்து மட்டும் தான் போட்டுக் கொடுத்தார் என்றும் நான் அப்படியே வழக்காக பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

S.d. Kannathal
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.